RESEARCH ARTICLE

INDIAN JOURNAL OF TAMIL

Asian Research Association

DOI: 10.54392/ijot2212

# பட்டினப்பாலையின் வாழ்வியல் சிந்தனைகள்

க. லதா [அ], கோ. சாந்தி [ஆ, *]

[அ] தமிழ்த்துறை, ஆதிபராசக்தி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கலவை-632506, தமிழ்நாடு, இந்தியா

[ஆ] தமிழ்த்துறை, த.கி.மு. மகளிர் கல்லூரி, வேலூர்-632001, தமிழ்நாடு, இந்தியா

# Biographical Thoughts of Pattinapalai

K. Latha [a], G. Shanthi [b, *]

[a] Department of Tamil, Adhiparasakthi College of Arts and Science, Kalavai-632506, Tamil Nadu, India.
[b] Department of Tamil, Dhanabagyam krishnaswamy Mudaliar Women's College, Vellore-632001, Tamil Nadu, India.
*Corresponding author Email: tamil.tailamma@gmail.com
DOI: https://doi.org/10.34256/ijot2212
Received: 03-11-2021; Revised: 20-01-2022; Accepted: 24-01-2022; Published: 01-02-2022

**Abstract:** Pattinapalai is one of the literatures that testifies to the life lived by the ancient Tamil people. This book is composed by the poet Uruthirakannanar. The specialty of the ancient Chola country, its wealth, the heroic deeds of Charikalan and the way of life of the people are highlighted. The song is set at 301 feet. Pattinapalai is the epitome of the charcoal Chola specialty of Kavirippoompattinam. Sangam literature holds a unique place in the creative context of Tamil literary history. The Sangakkala people can be discriminated against as natural morality because they lived with natural morality and as heroic age because of the emphasis on heroic sentiments. Songs are a mixture of literature and life. Sangakkala songs are also known as people's life songs. Most of them are spontaneous poems that express their innermost feelings. The study is set to explore the emotions of the poets, the lifestyles of the people, and the thoughts of life.

**Keywords:** Pattinapalai, Biographical thoughts, Feelings, Ancient tamil people.

## முன்னுரை

சங்க இலக்கியம் தமிழ் இலக்கிய நெடு வரலாற்றில் படைப்புச் சூழலில் தனக்கெனத் தனிச்சிறப்பான இடத்தைப் பிடித்துள்ளது. சங்ககால மக்கள் இயற்கை நெறியோடு வாழ்ந்ததால் இயற்கை நெறிக்காலம் எனவும், வீர உணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்ததால் வீரயுகக்காலம் எனவும் பாகுபாடு செய்யலாம். இலக்கியமும் வாழ்க்கையும் இரண்டறக் கலந்ததுதான் பாடல்கள். சங்ககாலப்பாடல்கள் மக்களின் உயிர்ப்பாடல்கள் என்றும் அழைக்கப்படுகின்றன. பெரும்பாலானவை தன்னுணர்ச்சிக் கவிதைகளாக அமைந்திருப்பதால் தத்தம் உள்ளத்து உணர்வுகளை வெளிப்படுத்தி வந்தனர். புலவர்களின் உணர்ச்சிகளையும், மக்களின் வாழ்க்கை முறைகளையும், வாழ்வியல் சிந்தனைகளை ஆராய்வதாக இவ்வாய்வு அமைகிறது.

## பண்பாடு - விளக்கம்

பண்பாட்டினை ஆங்கிலத்தில் “culture” என்ற சொல்லால் குறிப்பர். இச்சொல் குலத்தூரா என்ற இலத்தீன் சொல்லிலிருந்து தோன்றியதாகும். பண்பாடு என்ற சொல்லுக்கான சொற்பொருள் விளக்கமாக பண்பாடு என்ற பெயர்ச் சொல் 'பண்பாடு" என்ற வினைச்சொல்லிருந்து உருவானதாகும். பண்பாடு என்பது திருத்தம் பெறு பக்குவப்படு எனப்பொருள்படும். பண்பாடு என்பதற்கு திருத்தம் பெறுதல். பக்குவப்படுதல் எனபொருள் கொள்ளலாம் (Palanisamy, 1982).

10.54392/ijot2212

பண்பெனப்படுவது பாடறிந்தொழுகுதலாகும், விளைச்சலுக்கு ஏற்ற வகையில் பக்குவப்படுத்தப்பட்ட நிலத்தைப் பண்பட்ட நிலம் என்று கூறிவது போல் வாழ்க்கைக்கு ஏற்ப பக்குவப்பட்டமனமே. மனிதமே பண்புடைய, பண்பாடுடைய மனமாக மனிதமாக போற்றப்படுகிறது. ஆன்மீகம் என்பது அன்பின் மாற்றுருவமே அகத்தில் அலரும் அன்பே, அகப்பாடல்களில் உயிர் நிலையாகும்.

வாழ்க்கைப் பயணத்தில் ஊன்றுகோலாய் நின்று உதவுவது அறம் என்பதாலேயே செவ்வியல் இலக்கியங்களில் எவ்வகை இலக்கியங்களிலும் அறச்சிந்தனைகள் மிகுந்துள்ளன. இச்சிந்தனைகளை சிந்தையிலேற்றி இல்லறம் துறவறம் என்ற இருநிலைகளிலும் திறம்பட அறம்புரிந்து பண்புடன் வாழ்ந்தோர் பண்டைத் தமிழர் என்பதை பட்டினப்பாலை பாங்குடன் விரித்துரைக்கிறது.

## விருந்தோம்பல்

இல்லற வாழ்க்கையில் மேலான பண்பு விரும்தோம்பலாகும். 'விருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்புதற்கே" (குறிஞ்சி) என்பதால் வருந்தி வருவோரின் அரும்பசியை களைவதையே அறமாகக் கொண்டவள். காவிரிப்பூம்பட்டினத்து மக்கள் இம்மையில் புகழும், மறுமையில் இறைநிலையும் பெறவேண்டி இவ்வறத்தை இடைவிடாது செய்துவந்தனர். இவ்வறச்சாலைகள் 'அட்டில் சாலைகள்' எனப்பட்டன. இவ்வட்டில் சாலைகளைப் படம் பிடித்துக் காட்டும் பட்டினப்பாலை வரிகள்,

'புலிப் பொறிப் போர்க்கதவின்
திருத்துஞ்சுந்திரன் காப்பிற்
புகழ்நிலைஇய மொழிவலிர
அறநிலைஇய அகட்டிற்
சோறுவாக்கிய தொழுங்கஞ்சி
யாறு போலப் பரந்தொழுவி
ஏறு பெறச் சேறாகித
தேரோடத் துகள் கெழுமி
நீறாடிய களிறு போல
வெண்கோயில் மாசூட்டுந் (Palanisamy, 1982)
என்னும் பாடல் வரிகள் குறிப்பிடுகின்றன.

## பிற உயிர்களைக் காத்தல்

மாந்தர்க்குச் சோறிடும் அறச்சாலைகள் போன்று உழவிற்குதவும் எருதுகளுக்கு வைக்கோலிடும் அறச்சாலைகள் இருந்தன. வைக்கோல் தின்று வயிறு நிறைவுடன் நீர்ப்பருக வேண்டுமாதலில் அங்கு குளிர்ந்த நன்னீர்ச் சுரங்கங்களை அமைந்திருந்தனர். இது தன்னுயிர் போல் பிற உயிர்களை காக்கும் பெருமிதப் பண்பைக் காட்டுகிறது.

## சுங்கவரி பெறுவோரின் கடமையுணர்வு

காவிரிப்பூம்பட்டினம் கடற்கரைத் துறைமுகப்பகுதி என்பதால் ஏற்றுமதி, இறக்குமதிக்காக அளவற்ற பொருள்கள் குவிந்திருந்தன. இப்பொருள்களுக்கு விதிக்கப்பட்ட வரியே சுங்கவரி. சுங்கவரி பெறுவோர் இடைவிடாது செயல்பட்டனர். நல்ல அரசனுடைய பொருளைப் பிறர் கொண்டு செல்லாமல் பாதுகாத்தனர். இக்காவலர்கள் தலைமுறை தலைமுறையாக சுங்கவரி வசூலித்ததால் பெரும்புகழுடையராயிருந்தனர். காவிரியாறு பூமணங்களைக் கொணர்ந்து சேர்க்கும் தூய இருமணலிலே கடைக்கங்குலில் மட்டும் சிறிது துயில் கொண்டனர். என்ற செய்தி அவர்களின் கடமையுணர்வைக்

காட்டுகிறது. இவ்வரி விதிப்புப் பணி நாள்தோறும் இடைவிடாமல் நடைபெற்று வந்தது. இவ்வாறு பண்டங்கள் குறையாமல் குவித்து வைத்திருந்தனர்.

சுங்கவரி அளவிற்கதிகமாக விதிக்கப்படவில்லை. வணிகர்களும் நேர்மை தவறாதிருந்தனர் என்பது தெளிவு.

## வந்தோரை வரவேற்றல்

இப்பட்டினத்து மக்கள் மொழியறிவுடன் தம் தாய் நாட்டினின்றும் வாணிகத்தின் பொருட்டு குடிபெயர்ந்து வாழ்வோரையும் வரவேற்று அவர்களோடு கலந்து பழகும் இயல்பினர்

'மொழிபல பெருகிய பழிதீரதேயத்துப்

புலம்பெயர் மாக்கள் கலந்தினிதுரையும்

முட்டாச் சிறப்பிற் பட்டினம் பெறினும் (Palanisamy, 1982)

என்னும் பாடலின் மூலம் செல்வச் செழிப்போடு தன்னுடைய வாழ்க்கையை வாழ்ந்து வந்தனர் (Saaminaadhaiyar, 2018).

## வழிபாடும், விழாவும்

முருக வழிபாடே தொன்மை தொட்டு வழிபாடாக இருந்தது. திறந்த வெளியில் சேவற் கொடியை நட்டு வேலாட்டமும், வெறியாட்டமும் ஆடுவர். யாழ் ஒலித்தனர். முழுவு முழங்கின. பெண்கள் இசைப்பாக்களைப் பாடினர். நெய்தல் நிலமக்கள் தெய்வமாகிய வருணனுக்கு விழா எடுத்து வழிபடுவர். இவ்வழிபாடு முழுமதி நாளில் நடைபெறும் அப்போது தாம் விரும்பும் உணவை உண்டு தன் மனம் போனவாறு விளையாடி மகிழ்வர்.

தெய்வங்களுக்கு செய்யப்படும் விழாக்களைப்போன்று போரில் வீரமரணமடைந்த வீரர்க்கும் விழா அமைத்தனர் இவ்விழாவே நடுகல் விழாவாகும்.

## வேளாளரின் சிறப்பு

நல்லறிவு புகட்டிய சான்றோர்கள், வேளாளர்கள் தேவர்களைப் போற்றி வாழ்ந்தனர். திருக்கோயில்களுக்கு சிறப்பு செய்தனர். வேள்வி செய்வாரை கொண்டு அவியுணவு நல்கினர். நல்ல பசுக்களோடு எருதுகளையும் பாதுகாத்தனர். நான்மறை ஓதுகினற அந்தணர்களின் புகழ் நிலைத்திருக்கும்படி செய்தனர். விருந்தினர்க்கு உணவு முதலிய பொருள்களை வழங்கினர். வளர்ந்த மேழியால் உழவுத் தொழிலை செய்து வந்தனர். இவ்வாறு இல்லறத்தின் இயல்பு மாறாமல் குளிர்ந்த நிழல் போன்ற வாழ்க்கையை வாழ்ந்து வந்தனர். அவர்கள் வாழ்ந்த வாழ்க்கையானது எல்லாரும் பாராட்டும்படியாக இருந்தது.

'ஏமாப்ப இனிதுஞ்சிக்

கிளை கலித்து பகை பேணாது

புண்ணியம் முட்டாத் தண்ணிழல் வாழ்க்கை (Palanisamy, 1982)

எனவும்,

'தமவும் பிறவும் ஒப்ப நாடிக்

கொள்வதூஉம் மிகை கொளாது

கொடுப்பதூஉம் குறைகொடாது" (Palanisamy, 1982)

என்னும் பாடலின் மூலம் மக்களின் பண்டமாற்று முறையானது குறிப்பிடப்படுகிறது (Saaminaadhaiyar, 2018).

## பொழுதுபோக்கு

மனித வாழ்க்கையில் வளத்தையும் பண்பாட்டையும் உணர்த்துபவை பொழுது போக்குகளாகும். அகவையில் முதிர்ந்த மரங்களைக் கொண்டு போர் செய்வதற்காக மணல் மேட்டில் அமைக்கப்படும் களம் முரண் களரியாகும். தம்முள் வலி மிகுதி காண்பதற்காக போரிடும் வீரகளம். இது விளையாட்டுப் போராகையால் வீழ்ந்தவர் உடலில் புண்படாதிருக்கும் பொருட்டு மணற்பரப்பில் அமைத்தனர். காண்போர் கூடி நிற்றற்குரிய அகன்ற அம்பலத்தில் மணற்றிடரிலே போரிடுவர். போர் புரிவோரும் அதைக் காண்போருமாகிய இருதிறத்தானும் நாண்மீனை கோன்மீனை ஒத்திருந்தனர். புறங்கொடாது போராற்றியோர் மீண்டும் பனை மரத்துச்சியை இலக்காக வைத்து கவண் எறிந்து விளையாடினர். அதனால் அங்கிருந்த பனைகள் கல்லேற்றின் வடிவுடன் காணப்பட்டன.

'பெருஞ்சினத்தால் புறக்கொடாஅது

இருஞ்செருவின் இகல் மொய்ம்பினோர்

கல் லெறியும் கவண் வெரீஇப்

புள்ளரியும் புகர்ப்போந்தைப்

பறழ்ப்பன்றிப் பல்கோழி

உறைக்கிணற்றுப் புறச்சேரி

மேழகத் தகரொடு சிவல் விளையாடக்" (Vidhuvan Narayana Pillai, 1994)

என்ற பாடலின் மூலம் மக்களின் சிறப்பை அறியலாம்.

## முடிவுரை

மனித வாழ்க்கையில் வளத்தையும், பண்பாட்டையும் உணர்த்துபவை இலக்கியங்களாகும். இலக்கியங்களின் மூலம் மனித வாழ்க்கையை அறிந்துக் கொள்ளலாம். பண்டைத் தமிழரின் பண்பாட்டுக் கருவூலமாகத் திகழக்கூடியது பட்டினப்பாலை ஆகும். பட்டினப்பாலையின் மூலம் தலைவன், தலைவியின் இல்லச் சிறப்பை அறிந்துக்கொள்ளலாம். இவ்விலக்கியத்தின் மூலம் விருந்தோம்பல், பிற உயிர்களை காக்கின்ற விதம், மக்கள் வாழ்கின்ற வாழ்க்கைமுறை, வீட்டிற்கு வரும் விருந்தினரை உபசரிக்கும் விதம். மக்களின் கடமையுணர்வு விழாக்கள் எடுக்கும் விதம், அருமறை அந்தணர்களின் சிறப்பு, மருவூர்பாக்கத்தின் சிறப்பு, அரசரின் சிறப்பு, வீரம், கொடை ஆகியவை எடுத்துக் கூறப்பட்டுள்ளன. பட்டினப்பாலையில் மற்றுமொரு சிறப்பு தலைவன் தனக்கு எத்துணை பொருள் அல்லது நாட்டையே கொடுத்தாலும் அந்தப் பொருள் சரி பணமும் எதுவாக இருந்தாலும் தனது தலைவியின் அன்புக்கு எதுவும் ஈடாகாது என்ற கருத்தைக் கொண்டு அன்புக்கு ஈடாக இந்த உலகத்தில் எந்த பொருளையும் கொடுக்க முடியாது என்பதை பட்டினப்பாலைக் குறிப்பிடுகின்றது.

## Reference


Palanisamy, S., (1982) Purananurutil Tamilar Panpadu, New Century Book House, Chennai, India.

Vidhuvan Narayana Pillai, (1994) Pathupattu Moolamum Uraiyum, Mulai nilaiyam, Chennai, India.

Saaminaadhaiyar, U.Ve., (2018) Pathupattu, Dr.U.V.Saminadhaiyer noolnilayam, Chennai, India.



### Funding

No funding was received for conducting this study.


### Conflict of interest

The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License**

© The Author(s) 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License.

**Cite this Article**

K. Latha & G.Shanthi, Biographical Thoughts of Pattinappalai, Indian Journal of Tamil, 3(1) (2022) 8-12. https://doi.org/10.54392/ijot2212